## 13.11 சமூகக் காடுகள் மூலம் கிடைக்கும் மொத்த வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்குச் சேரவேண்டிய பங்குத் தொகையினை பகிர்ந்தளித்தல்

---

சுற்றுப்புறம் வனத் (வனம் 6) துறை

அரசாணை (நிலை) எண்.74 நாள் : 21.3.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 137, சுற்றுப்புறம் (வனம் 6) நாள்–02.05.1997.
2. முதன்மை வனத் துறைத் தலைவர் கடித எண். டிஈ2/51044/97–1 நாள்–6.10.1997.
3. வனத் துறைத் தலைவர் (சமூகக் காடுகள்) கடிதம் எண். 20393/93/க2, நாள்–14.08.1997 ம 16.10.1997.

**ஆணை**

பார்வை 1ல் கண்ட அரசாணைக்குச் சில திருத்தங்கள் செய்ய அரசு முடிவு செய்து, பத்தி 4(ஆ)ல் உள்ள ஆணைக்கு பதிலாக கீழ்க்கண்ட திருத்திய ஆணை வெளியிடப்படுகிறது.

**திருத்தம்**

''சமூகக் காடுகள் மூலம் கிடைக்கும் மொத்த வருவாயிலிருந்து 4022 கிராம சமூக வனத் தோட்ட ஊழியர்கள் / காவலர்களுக்கான ஊதியங்கள் மற்றும் ஏனைய செலவினங்களை கழித்து, மீதமுள்ள தொகையிலிருந்து ஊராட்சிகள் / வனத் துறைக்கு முறையே 60:40 என்ற விகிதத்தில் 1.4.97முதல் பகிர்ந்தளிக்க வேண்டும்.''

2. இந்த ஆணை ஊரக வளர்ச்சி மற்றும் நிதித் துறைகளின் இசைவுடன் முறையே அ.சா.கு.எண்.25/ஆர்.டி/98, நாள் 19.12.1997 மற்றும் 6298/எப்.எஸ்/பி/97, நாள்–26.12.1997 வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே.எஸ்.ஸ்ரீபதி**
அரசு செயலாளர்